பக்கங்கள் 22+5

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 08 செவ்வாய்க்கிழமை 20.02.2024 அதிர்வு 204

## கோப்பாயில் வாள்வெட்டு! பெண் ஒருவர் படுகாயம்!!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – கோப்பாய் மத்திப் பகுதியில் பெண்ணொருவர் மீது வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று இரவு இடம் பெற்றுள்ளது. 04




# யாழில் இந்தியத் தூதுவராலயத்தை முற்றுகையிட்டு மீனவர்கள் போராட்டம்

## இந்திய, இலங்கை அரசுகளுக்கு எதிராகக் கோஷம் பொலிஸார் இடைமறித்தமையால் பெரும் பதற்றம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி அடா வடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதுவராலயம் முன்பாக மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல்வேறு மீனவர் சங்கங்கள் இணைந்து இந்தியத் தூதரகத்தை



# வலி. வடக்கு காணி விடுப்பு தொடர்பில் ராணுவக் கட்டளைத் தளபதியுடன் பேச்சு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் யாழ். இராணுவக் கட்டளைத் தளபதியுடன் யாழ். மாவட்ட செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

பலாலி இராணுவத் தலைமை அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி எம்.சி.பி. விக்கிரமசிங்கவை யாழ். மாவட்ட செயலாளர் 04




## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் திரண்டு

# சர்வதேசத்திடம் நீதி கோரி கிளிநொச்சியில் பேரணி!

(த.சுபேசன்)

வடக்கு – கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர் போராட்டத்தின் 7ஆம் ஆண்டு நிறைவு நாளை முன்னிட்டு இன்று காலை கிளிநொச்சியில் அடையாளப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு – கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மேற்படி பேரணி முற்பகல் 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பித்து முற்பகல் 11.30 மணிக்கு கிளிநொச்சி டிப்போ சந்தியில் நிறைவடைந்தது.

இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் சமூக அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சர்வதேச நீதி கோரி கோஷம் எழுப்பினர்.











## யாழ். பல்கலை இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீட மாணவர்கள்

# விரிவுரைகளைத் துரிதப்படுத்துமாறு கோரி இன்று வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டம்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீட மாணவர்கள் விரிவுரைகளைத் துரிதப்படுத்தக் கோரி இன்று வகுப்புப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழ இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீட இசைத்துறையில் 4ஆம் வருடத்தில் கல்வி கற்க வேண்டிய 3ஆம் வருட 2ஆம் அரையாண்டு மாணவர்களின் விரிவுரைச் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தக் கோரியே வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாணவர்கள் வாயிற் கதவுகளை மூடி போராட்டத்தை மேற்கொண்டனர். இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை நிறுத்தப்பட்டதுடன் விரிவுரையாளர்கள், பணியாளர்கள் உட்செல்ல முடியாமல் தடுத்துவைக்கப்பட்டனர்.

இசைத்துறை மாணவர்களின் போராட்டத்தால் ஏனைய துறை மாணவர்களின் விரிவுரைகளும் பாதிக்கப்படுகின்றன என்று விரிவுரையாளர்கள் கவலை வெளியிட்டனர்.







# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கோப்பாயில்...**

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இது தொடர்பாக நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**வலி. வடக்கு காணி...**

அம்பலவாணர் சிவபாலசுந்தரன் உள்ளிட்ட குழுவினர் சந்தித்துப் பேசினர்.

மேற்படி சந்திப்பில் ஜனாதிபதியின் வடக்கு மாகாண மேலதிக செயலாளர் இளங்கோவன். யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ம.பிரதீபன், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) கே.ஸ்ரீமோகனன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகங்கா சுதீஸ்னர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது யாழ். தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட வலிகாமம் வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது.

**யாழில் இந்திய...**

முற்றுகையிடப் போவதாக அறிவித்திருந்ததால் தூதுவராலயம் முன்பாக பெரிமளவிலான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

முற்பகல் 11 மணியளவில் மீனவர்கள் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டப் பேரணியாகத் தூதுவராலயத்தை நோக்கி முற்றுகையிடச் சென்றபோது தூதுவராலயத்துக்கு அருகாமையில் போராட்டக்காரர்கள் பொலிஸாரால் இடைமறிக்கப்படனர்.

இதனைத் தொடர்ந்து மீனவர் சங்கப் பிரதிநிதிகள் 7 பேர் மட்டும் தூதுவராலயத்துக்குச் சென்று தூதுவரைச் சந்தித்து மகஜர் கொடுப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது போராட்டக்காரர்கள் இந்திய, இலங்கை அரசுகளுக்கு எதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள், இந்திய இழுவைப் படகு உரிமையாளர்களே எங்களையும் வாழவிடு, கடற்றொழிலாளர்களைப் பிரித்தாளும் தந்திரத்தைச் செய்யாதே, தொப்புள் கொடி உறவுகளைப் பிரிக்காதே, இந்திய அரசே இலங்கையின் வடபகுதி மீனவர்களைத் திரும்பிப் பார், அத்துமீறும் இந்திய மீனவர்களின் அராஜகம் அடியோடு ஒழிய வேண்டும், சட்டவிரோத அத்துமீறலைத் தடுத்து நிறுத்து, வடக்கு மீனவர்களின் வளங்களைச் சூறையாடாதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வேளையில், போராட்டக்காரர்களைப் பொலிஸார் இடைமறித்தபோது அவர்கள், பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மேற்படி போராட்டத்தில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும் வருகை தந்த மீனவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

அதேநேரத்தில் பெருமளவிலான பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் போராட்டக் களத்தில் குவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.









# யாழ்ப்பாணம், கிளிநொச்சி அரச அதிபர்களின் சேவை நீடிப்பு அமைச்சரவையால் நிராகரிப்பு!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்களின் ஒரு வருட சேவை நீடிப்பு அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கடந்த 12 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்ற நிலையில் கிளிநொச்சி மாவட்டத்துக்கான அரச அதிபர் பதவி வெற்றிடமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாதசுந்தரன் எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி ஓய்வுபெற்றுச் செல்லவுள்ளார்.


இவ்வாறு ஓய்வுநிலைக்குச் சென்றுள்ள இரு அரச அதிபர்களுக்கும் மேலும் ஒரு வருடம் சேவை நீடிப்பு வழங்கவே நேற்றைய அமைச்சரவைக்குப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட சேவை நீடிப்பை வழங்கும் பட்சத்தில் பாதிக்கப்படும் அரச உத்தியோகத்தரால் எவராவது ஒருவர் நீதிமன்றத்தை நாடினால் அதனை எதிர்கொள்வது கடினம் என்று சுட்டிக் காட்டப்பட்டதன் அடிப்படையில் சேவை நீடிப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனவரி 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த வேளையில் இரு அரச அதிபர்களும் அமைச்சர் ஒருவரின் சிபார்சுடன் சேவை நீடிப்பு கோரிக்கை சமர்ப்பித்தனர் என்ற செய்தி ஏற்கனவே வெளிவந்திருந்தது.

இதேவேளை, கடந்த 12 ஆம் திகதி ஓய்வுபெற்றுச் சென்ற கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இன்று வரை தனது உத்தியோகபூர்வ வாகனம் மற்றும் வதிவிடம் என்பவற்றை மீளக் கையளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் ஹெரோயினுடன் நான்கு இளைஞர்கள் சிக்கினார்கள்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

5 கிராம் 465 மில்லிகிராம் ஹெரோயினுடன் கோண்டாவில் வீதி, இருபாலையில் வைத்து நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஹெரோயினைக் கொள்வனவு செய்து உடைமையில் கொண்டு செல்கின்றனர் என்று கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய கோண்டாவில், இருபாலை வீதிக்கு விரைந்த பொலிஸார் 2 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயினுடன் 31 வயதான ஒருவரையும், 85 மில்லிகிராம் ஹெரோயினுடன் 24 வயதான இளைஞர் ஒருவரையும், 2 கிராம் 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் 25 வயதான இளைஞர் ஒருவரையும், 1 கிராம் 10 மில்லிகிராம் ஹெரோயினுடன் 24 வயதான இளைஞர் ஒருவரையும் கைது செய்தனர்.

இதேவேளை, இவர்களிடம் இருந்து ஊசிகளையும் கைப்பற்றிய நிலையில் மேற்படி நால்வருக்கும் எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று கோப்பாய் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான முதற்கட்ட விசாரணைகளில் குருநகர் பகுதியில் இருந்து ஹெரோயினைத் தாம் கொள்வனவு செய்தனர் என்று சந்தேகநபர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் பொலிஸ் தரப்பிலிருந்து தெரியவந்தது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலின் பேச்சுப் பல்லக்கு

‘பயணக் களைப்புக்குப் பேச்சுப் பல்லக்கு’ என்பார்கள். பயணம் களைப்பின்றி அமைவதற்காக வாய்ப்பந்தல் பேச்சை முன்னெடுப்பதைத்தான் இப்படிக் கூறுவர். பயணக் களைப்பு ஏற்படாமல் - அலுப்புத் தட்டாமல் - பயணத்தை முடிப்பதற்கான ஓர் உத்திதான் அது. அந்தப் பேச்சினால் வேறு பயனில்லை.

தீர்வுக்கான பேச்சுகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவ்வப்போது விடும் கயிறும் இந்த வகையறாவைச் சேர்ந்ததுதான்.

“வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களை முன்னெடுத்துள்ளோம். அதன் பின்னர் மலையகத் தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்.” - என்று மிகவும் பொறுப்புள்ள தலைவர் மாதிரி நேற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியின் கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்காகப் பத்தாயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் ‘பாரத் - லங்கா’ வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து நேற்று ஒன்லைன் மூலம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

தான் 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலம் முதல் இப்படி வெறும் வாய்க்கு மெல்லுவதற்கு அவல் போட்ட மாதிரி பல கதைகளை அவ்வப்போது அவிழ்த்து வருகின்றார் அவர்.

அவர் இப்படி அவ்வப்போது - தவறாது - பறக்க விடும் வெற்றுவேட்டு பலூன்கள் என்று அவற்றை இப்பத்தியில் பல தடவைகள் வரிசைப்படுத்தி விமர்சித்து வந்திருக்கிறோம்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முன்னேற்றம் ஒன்று பேச்சு வடிவத்தில் முன்னெடுக்கப்படுவது போல படம் காட்டும் வேலையை அவர் வெற்றிகரமாக செய்திருக்கிறார். அவ்வளவுதான்.

உண்மையில் அவர் கூறுவது போல தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முன்நகர்வுகளோ, பேச்சோ எதுவுமே அவராலோ அவரது அரசினாலோ இப்போது முன்னெடுக்கப்படவே இல்லை என்பதுதான் உண்மை.

ஆனால், அப்படி நடப்பது போல காட்டி மக்களினதும் சர்வதேசத்தினதும் காதுகளில் பூச்சுற்ற அவர் எத்தினிக்கிறார்.

பயணக் களைப்பு - அசதி - ஏற்படாமல் இருக்க சக பயணிகளுடன் பேச்சுப் பல்லக்கு கட்டுவது போல தமது அரசியல் பயணத்துக்கு - வசதிக்காக - தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு முயற்சி நடக்கின்றது என்கிறார். அதை முடித்துக் கொண்டு முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுவார் என்று கயிறு வேறு விடுகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

அவரின் பேச்சுத் தந்திர நடவடிக்கை தமிழர்களுக்குப் புதியதல்ல. அந்த நொண்டிக் குதிரையில் மீண்டும் மீண்டும் ஏறி விழுவதற்கு தமிழர்கள் மதியற்றவர்களும் அல்லர்.

2002 - 2003 காலப்பகுதியில் தாய்லாந்து, ஜப்பான், ஜேர்மனி, நோர்வே என்று நான்கு நாடுகளில் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்தியவர்கள் தமிழர்கள்.

ஒருபுறம் - தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக இருந்த விடுதலைப் புலிகளுடன் பேசிக்கொண்டு, வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகத்துக்கு, உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வை வழங்குவார் என்று சர்வதேச மட்டத்தில் முடிவை அறிவித்துக் கொண்டே, மறுபுறத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஊடுருவிப் பிளக்கவும், சர்வதேச வலைப்பின்னலை விரித்து அதில் புலிகளை வீழ்த்தி அழிக்கச் செய்யவும் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

யுத்தம் முடிந்த பின்னரும் தமிழர்களின் பக்க பல உதவியுடன் நல்லாட்சி அரசை நிறுவி, கடைசி வரை தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவில் - முண்டில் - தமது அரசைக் காப்பாற்றிக் கொண்டு நடத்திவிட்டு, இதுபோன்ற பேச்சுக்கள் மூலம் எதுவும் சித்திக்காமல் மூடி அடைத்தவரும் இதே ரணில் விக்ரமசிங்கவே.

அவரை நம்பிப் புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கத் தமிழர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க முன்வைந்தனர். எண்பதுக்கும் மேற்பட்ட வழிகாட்டுதல் கூட்டங்களை ஏற்படுத்தி, கடைசியில் தமிழர்களுக்கு ஒன்றுமில்லாமல் ஏமாற்றி, நட்டாற்றில் விட்டவர் அவர்தான்.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழர் தரப்புடன் பேச்சு நடத்துவது போல காட்டிக் கொண்டு தமிழர்களை நட்டாற்றில் விடுவது தான் ரணில் - ராஜபக்ஷ அரசின் திட்டமாகும்.

# வயதான பெண்களும் எலும்பு மெலிவுறல் நோயும்!



வயதான பெண்களுக்கு ஏற்படும் எலும்பு மெலிவுறல் நோயை எலும்பு நலிவு நோய் என்று கூறினாலும் கூட, இது ஒரு நோயல்ல. ஏதோ ஒரு நோயின் பாதிப்பு அல்லது ஏதாவது நோயின் காரணமாகவே இது ஏற்படும். குறிப்பாக பல்வேறு நோய்கள் எலும்பை பாதிப்பதன் காரணமாகவும் இது ஏற்படுகின்றன.

எந்தவித நோயுமில்லாமல் சிலருக்கு இந்த எலும்பு மெலிவுறல் இருக்கும். அது இளைய வயதினருக்கும் ஏற்படலாம், வயதானவர்களுக்கும் ஏற்படலாம்.

### எலும்பு மெலிவுறலுக்கு காரணங்கள்

கேடயச் சுரப்பியின் ஹோர்மோன் மிகையால் உணவு ஜீரணமானபின் முறையாக உட்கிரகிக்கப் படாமல் போவதால், விட்டமின் 'சி' குறைபாடு, கல்சியம் குறைபாடு, நீண்ட காலமாக படுத்த படுக்கையாக கிடப்பவர்களுக்கு அட்ரினல் சுரப்பியின் 'ஹோர்மோன்' மிகையால் ஏற்படும், இனவிருத்தி உறுப்புகளின் குறைபாடு, நீண்ட நாட்களாக இரத்தம் உறைதலை தடுக்கும் மருந்துகளை தொடர்ந்து எடுத்தல் போன்ற காரணங்களால் இந்த நோய் ஏற்படுகின்றது.

மேலும், பிற வளர்சிதை மாற்றக் கோளாறுகள், நாளமில்லாச் சுரப்பிகளின் கோளாறுகள் காரணமாக பிறவிக் கோளாறு எலும்பு நோய் ஏற்படுகிறது.

மூட்டுவாத நோய் உள்ளவர்கள், மதுபானங்களுக்கு அடிமையானவர்கள், காக்கை வலிப்பு நோய் உள்ளவர்கள், நீரிழிவு நோய் உள்ளவர்கள், நீண்ட காலமாக நுரையீரல் சுவாசக் குழாய் அடைப்பு நோய் உள்ளவர்கள், உணவின்றி (பட்டினி) இருப்பவர்களுக்கும் எலும்பு மெலிவுறும் நோய் இருப்பது அவர்களுக்கு தெரியாமல் இருக்கும்.

### யாருக்கு ஏற்படும்?



தொகுப்பு:
பைஷல் இஸ்மாயில்

பொதுவாக 'எலும்பு தேய்தல்' என்று பேச்சு வழக்கில் குறிப்பிடுகிறார்கள். இந்நோய் பெரும்பாலும் வயதானவர்களுக்கே ஏற்படும். அதிலும் பாதிக்கப் படுவதில் பெரும்பாலானோர் பெண்களேயாகும். குறிப்பாக, மாதவிடாய் நின்றுபோன 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கேயாகும்.

### எலும்பில் தோன்றும் மாற்றங்கள்?

இவர்களுக்கு எலும்பின் அடர்த்தி குறைந்துவிடும். எலும்பில், பல்வேறு தாது உப்புகளும் சேர்ந்து, எலும்பு உருப்பெறுதலும், பின்னர் அவை எடுக்கப்பட்டு வெளியேற்றமும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும். அதில் மாறுதல் ஏற்பட்டால் அதாவது, தாது உப்புகள் வெளியேற்றம் அதிகமாக நடந்தால் எலும்பு மெலிவுறும்.

பெண்களுக்கு மாதவிடாய் நிற்கின்றபோது "இஸ்ரோஜின்" ஹோர்மோனின் அளவு வெகுவாக குறைந்து விடுவதால் எலும்பு மெலிவுறுகிறது. இவர்களது தேய்வுற்ற எலும்புப் பகுதிகளில், புதிய உயிர்ணுவை ஏற்படுத்துகின்ற எலும்பு, தேவையற்ற உயிரணுவு எலும்புப் பகுதியினை அகற்றிவிடுகின்ற எலும்பு உயிரணுவும் காணப்படும்.

இவ்வாறு எலும்பு மெலிவுறல் பாதிப்பு உடலின் பல்வேறு எலும்புகளையும் பாதிக்கலாம். கை கால் எலும்புகள் கழுத்து முதுகு முன்னெலும்புகள் விலா எலும்புகள் பெரிதும் பாதிக்கப்படலாம்.

கருப்பின மக்களுக்கும், நீக்ரோக்களுக்கும் எலும்பு மெலிவுறும் நோய் குறைவான அளவே காணப்படும். ஏனென்றால் இவர்களின் எலும்பில் அதிகமான

தொடர்ச்சி▼

# வயதான பெண்களும் எலும்பு மெலிவுறல் நோயும்!



தொடர்ச்சி▲

தாதுப் பொருள்கள் மிகுந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

"எலும்பு மெலிவுறல்" உள்ளவர்களுக்கு தசைகள் அதிக வளர்ச்சியை அடைந்திருக்காது. அவர்களது உடல் எடையும் குறைந்தே காணப்படும்.

மாதவிடாய் அடையாத பெண்களுக்கு இந்நோய் காரணமாக, அவர்களது கருவணுகத்தை வெளியேற்றி விட்டால் அவர்களுக்கும் மாதவிடாய் அடைந்த பெண்களைப் போலவே எளிதாக எலும்பு மெலிவுறல் பாதிப்பு ஏற்பட்டுவிடுகிறது.

எனவே இந்த நோயின் பாதிப்பிற்கும் 'இஸ்ரோஜீன்' ஹோர்மோனின் குறைபாடடுக்கும் நெருங்கிய தொடர்புண்டு.

புகைபிடிக்கும் பழக்கமுள்ள பெண்களுக்கு எளிதாக கருவணுகம் பாதிக்கப்படுவதாலும் எலும்பு மெலிவுறல் ஏற்பட்டுவிடும். உணவில் கல்சியம் குறைவாக இருப்பதாலும், ஜீரணமான உணவு முறையாக உட்கிரகிக்கப்படாமையாலும், நீண்ட நாள்கள் படுக்கையில் இருப்பவர்களுக்கும், அதிக அமிலத் தன்மையுள்ள உணவுகள், புரத உணவுகள் உண்பதாலும் இந்த நிலை ஏற்படலாம்.

## நோய் அறிகுறிகள்?

இந்த எலும்பு மெலிவுறலால் எலும்புகள் தேய்ந்து அவை எளிதில் உடைந்து விடும் தன்மையை பெற்று விடும். இதன் காரணமாக, முதுகு முள்ளெலும்பு, இடுப்பெலும்பு, கை, கால் எழும்புகளில் முறிவை ஏற்படுத்திவிடும்.

எலும்பு தேய்வுறுவதால், முதுகு முள்ளெலும்புகள் பாதிக்கப்பட்டு, அவை வளைந்துவிடும். இதனால் அவற்றில் வலி ஏற்படும். சிறிதாக, திரும்பினாலும் சிறிய வேலைகள் செய்தாலும் வலி அதிகரிக்கும். தசைகளில் தளர்வு ஏற்பட்டிருக்கும். இவர்களுக்கு பசியும் இருக்காது.

வலி லேசாக இருந்தாலும் அது தொடர்ந்து, உட்பக்கமாக ஒருவித அசதியை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். இவர்கள் படுத்திருந்தாலும், உடனடியாக எழுந்திருக்க முடியாது. உருண்டுதான் எழுவார்கள். எலும்பு மெலிவுறுதல் ஏற்பட்ட பகுதியினை அழுத்தினால் அதிகமாக வேதனை ஏற்படும். முதுகு வளைதலும் ஏற்படும்.

## பரிசோதனைகள்?

இவ்வாறானவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்து எலும்பு மெலியுறல் ஏற்பட்டதையும், எலும்பு முறிவு ஏற்பட்டதையும், எலும்புகள் விலகி, வளைந்திருப்பதையும் இதன் மூலம் கண்டறியலாம்.

முதுகெலும்பில் எகஸ்ரே எடுத்து பார்ப்பதன் மூலமாக அங்கு ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் அறியமுடியும். கதிரியக்க பரிசோதனை செய்து எந்தெந்த எலும்புகளில் மெலிவுறல் ஏற்பட்டுள்ளது என்பதையும் கண்டறியலாம்.

இதுபோன்று, எலும்பின் தடிமத் தன்மையை கண்டறியும் சோதனையும், எலும்பில் கல்சியத்தின் அளவு பரிசோதனையும் செய்யப்பட வேண்டும். இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனையின் மூலமும் கண்டறியலாம்.

சிகிச்சைகள்?

எலும்பு மெலிவுறல் பல்வேறு காரணங்களால் ஏற்படுவதால் அதனை அறிந்து சிகிச்சை செய்ய வேண்டும். என்றாலும், இவ்வகை நோயாளிகள் அனைவருக்கும் பொதுவான சிகிச்சைகள் செய்ய வேண்டியது வரும்.

மிகுந்த 'முதுகுவலி உள்ளோரையும், முதுகு முள்ளெலும்பு உடைந்தவர்களையும் படுக்கையில் ஓய்வெடுக்க வைக்கவேண்டும். (அவர்களுக்கு வசதியாக உள்ள நிலையில்) 'வலியை குறைப்பதற்கான மருந்துகளையும், மலச்சிக்கலை தவிர்ப்பதற்கான மருந்துகளையும் கொடுக்க வேண்டும்.

ஹோர்மோன் எலும்பு மெலிவுறலை வராமல் தடுக்க பெரிதும் பயன்படுகிறது என்றாலும், ஆரம்ப நிலையில் சிகிச்சை அளிக்கின்றபோது நல்ல பயனையே தருகிறது. குறிப்பாக, வைத்தியரின் ஆலோசனை மற்றும் அறிவுறுத்தல்களை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

டாக்டர் முத்துச் செல்லக்குமார்
MD (Gen. Med.)



# வடக்கில் அபிவிருத்தி திட்டங்களை பரவலாக்க மன்னாரில் ஐ.எஸ்.ஆர்.சீ. அலுவலகம் திறப்பு

(வாஸ் கூஞ்ஞ)

கல்வி , வாழ்வாதாரம் போன்றவற்றுக்கு உதவிக்களைச் செய்துவரும் இஸ்லாமிய உதவிக் குழு அமைப்பானது (ஐ.எஸ்.ஆர்.சீ.) இஸ்லாமிய மக்களுக்கு மட்டும் உதவி செய்யும் அமைப்பாக இருக்காது சகல இன மக்களுக்கும் உதவி செய்யும் நோக்குடன் வட மாகாணத்துக்கான அலுவலகத்தை மன்னாரில் திறந்து வைத்துள்ளது.

இந்த அமைப்பின் பணிப்பாளர் அசனார் மொகமட் மிஹ்லர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இந்த அலுவலகத்தை மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.கனகேஸ்வரன் வியாழக்கிழமை (15) திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த தேசிய அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர் சஞ்சீவ விமலகுணரத்தின, மன்னார் முன்னாள் அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் உட்பட மதத் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்த அமைப்பானது இருபது வருடங்களாக நாட்டில் இயங்கி வருகின்றபோதும் மன்னாரில் ஆறு வருடங்களாக அலுவலகம் இன்றிய நிலையில் இயங்கி வந்துள்ளது.

திறக்கப்பட்ட இந்த அலுவலகத்தை மையமாக வைத்து வட மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் இதன் உதவிகள் பரவலாக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# தனியாக வசித்த பெண் சடலமாக மீட்கப்பட்டார்!



அஹுங்கல்ல, எகொடமுல்ல பிரதேசத்தில் வீடொன்றில் தனியாக வசித்து வந்த பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணைப் பல நாள்களாக வெளியே நடமாடவில்லை எனவும் அவர் தங்கியிருந்த வீட்டின் திசையில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகவும் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் அஹுங்கல்ல பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதற்கமைய, நேற்று (19) பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், அந்தப் பெண் வீட்டினுள் உடல் சிதைந்த நிலையில் நாற்காலியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அஹுங்கல்ல, எகொடமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 65 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நூல்கள் வெளியீடு!



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் நூல்களின் வெளியீட்டு விழா, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் முனைவர் க.இரகுபரன் தலைமையில் இடம்பெற்றது.


சிவாகமகலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களின் ஆசியுரையுடன் தொடங்கிய இந்த விழாவுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நூலாசிரியரின் பேத்தி செல்வி நதீதா ஸமா ஸமத் வரவேற்புரை செய்ய எழுத்தாளர் திருமதி வசந்தி தயாபரன் தொடக்க உரையையும், தமிழ்மாமணி அல்அசூமத் நூல் அறிமுகமும் செய்தனர். செல்வி தேஜஸ்வினி பிரணவன் நிகழ்வை த் தொகுத்து வழங்கினார்.





# சுற்றுலாப் பயணிகள் வருகை நாட்டில் அதிகரித்து வருகிறது



சுற்றுலாப் பயணிகளது வருகை நாட்டில் அதிகரித்து வருகிறது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த வகையில் பெப்ரவரி மாதத்தின் முதல் இரண்டு வாரங்களில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 328 ஆகும்.

கடந்த நாள்களில், காதலர் தினமான பெப்ரவரி 14 அன்று இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 9443 ஆக காணப்பட்டுகிறது. கடந்த காலங்களில் பதிவான ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளின் வருகை இதுவாகும்.

அதேவேளை, கடந்த 15 வாரங்களில், அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்து வருகை தந்துள்ளனர் என்றும் ரஷ்யாவிலிருந்து 16 ஆயிரத்து 701 சுற்றுலாப் பயணிகள் கடந்த 15 வாரங்களுக்குள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பிறப்பு எண்ணிக்கைக் குறைவால் தரம் ஒன்று அனுமதியிலும் வீழ்ச்சி

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

பிறப்பு எண்ணிக்கை குறைவடைந்துள்ள நிலையில் பாடசாலைகளில் முதலாம் வகுப்பில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அது தொடர்ந்து குறைந்து செல்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைய புள்ளி விவரங்களின் படி 2012 ஆம் ஆண்டில், 3 லட்சத்து 45 ஆயிரம் மாணவர்கள் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் சேர்க்கப்பட்டனர். எனினும் 2022 இல் அந்த எண்ணிக்கை 3 லட்சத்து 28 ஆயிரமாகக் குறைந்துள்ளது.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டளவில் முதலாம் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை மூன்று லட்சமாக குறைந்திருந்தது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

2012 ஆம் ஆண்டு ஐந்தாம் தரத்தில் 3 லட்சத்து 27 ஆயிரத்து 849 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். 2013 ஆம் ஆண்டில் அது 3 லட்சத்து 47 ஆயிரத்து 500 ஆக அதிகரித்தது. எனினும் 2022 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 28 ஆயிரம் மாணவர்கள் ஐந்தாம் தரத்துக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டு பாடசாலை காலத்தில் பாடசாலையை விட்டு வெளியேறும் மாணவர்களின் எண்ணிக்கை 16.07 வீதமாக இருந்த போதிலும் தற்போது அது 7 வீதத்துக்கும் மேலாக குறைந்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

6, 7, 8, 9 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களே இவ்வாறு பாடசாலையை விட்டு வெளியேறியுள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய சுற்றுலாப் பயணி துன்புறுத்தல்; கண்டனம் வெளியிட்டுள்ளார் சம்பிக்க!

## உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை



இலங்கையில் உள்ள கடற்கரை ஹோட்டலில் ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் துன்புறுத்தப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவம் கண்டிக்கத்தக்கது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

இலங்கையும் ரஷ்யாவும் பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பின் அடிப்படையில் கட்டப்பட்ட நீண்டகால மற்றும் வலுவான இராஜதந்திர உறவுகளை அனுபவித்து வருகின்றன.

இவ்வாறான சம்பவங்கள் இரு நாடுகளின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதுடன் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நல்லுறவை சீர்குலைப்பதாகவும் இவ்வாறான செயற்பாடுகள் காணப்படுகின்றன.


ஒரு கட்சி என்ற வகையில், இந்த விவகாரத்தை முழுமையாக விசாரிக்கவும், துன்புறுத்தலுக்கு காரணமான குற்றவாளிகளை கைது செய்யவும் உடனடியாகவும் தீர்க்கமான நடவடிக்கை எடுக்க அரசைக் கடுமையாக வலியுறுத்துகிறோம்.

நீதி விரைவாக வழங்கப்படுவதும், குற்றவாளிகள் குற்றம் நிரூபிக்கப்பட்டால் சட்டத்தின் கீழ் அதிகபட்ச தண்டனையை எதிர்கொள்வதும் அவசியம்.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நிகழாமல் இருக்க வெண்டும். ரஷ்ய பார்வையாளர்கள் உட்பட அனைத்துச் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இலங்கை அறியப்படும் விருந்தோம்பல் மற்றும் மரியாதையின் தரத்தை நிலைநிறுத்த வேண்டும்.

ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் உட்பட இலங்கைக்கு வருகை தரும் அனைத்துப் பயணிகளும் தங்களுடைய தங்கியிருக்கும் காலம் முழுவதும் வரவேற்கப்படுவதையும், மதிக்கப்படுவதையும், பாதுகாப்பாகவும் உணருவதை உறுதிப்படுத்த நாம் ஒன்றிணைந்து செயற்படுவோம்.– என்றுள்ளது.



# மின்சாரத்தைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்து

இலங்கையில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலையுடன், நாளாந்த மின்சார தேவை 03 முதல் 04 மெகாவட் மணிநேரம் வரை அதிகரித்துள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த நாள்களில் நீர் மின் உற்பத்தி 20 வீதமாக குறைந்துள்ளது என்றும் நீர் மின் நிலையங்களின் நீர் கொள்ளளவு 83 வீதமாக இருப்பதால் நீர் மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்படும் எனவும் மின் பொறியியலாளர் நோயல் பிரியந்த தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையின் அடிப்படையில் அனல் மின் உற்பத்தி 63 வீதமாகவும், சூரிய மின் நிலையங்கள் மூலம் 04.5 வீத மின்சாரத் திறனும், காற்றாலை மின் நிலையங்கள் மூலம் 05 வீத மின்சாரத் திறனும் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த நிலையில், மின் நுகர்வோர் மின்சாரத்தைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருவிழாக்கால உணவு வியாபாரங்களில் உணவுப் பாதுகாப்பில் கவனம் செலுத்துக!

**பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவிப்பு**

(த.சுபேசன்)

பாலதீவு ஆலய திருவிழா தொடங்கவுள்ள நிலையில், திருவிழாக்கால உணவுப் பொருள் வியாபாரத்தின் போது உணவுப் பாதுகாப்பு தொடர்பில் அதிக கரிசனை செலுத்தவேண்டும் என்று பூநகரிப் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பூநகரிப் பிதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பாலைதீவு புனித அந்தோனியார் திருவிழாவில் விழாக்கால உணவுப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவோர் உணவுப் பாதுகாப்பு குறித்து அதிக கரிசனை செலுத்த வேண்டும். இதனால் மக்களின் ஆரோக்கியம் பாதுகாக்கப்படுவதோடு வியாபாரத்தையும் சிறப்பாக நடத்த முடியும்.

எதிர்வரும் 28ஆம் திகதியில் இருந்து பங்குனி 2 ஆம் திகதிவரை புனித பாலைதீவு அந்தோனியார் திருத்தல விழா இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



பாலைதீவில் விழாக் காலத்தில் உணவுப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவோர் பூநகரி பிரதேச சபையின் தற்காலிக அனுமதி, நிரந்தரமாக உணவு விற்பனையில் ஈடுபடும் பிரதேசத்தில் பெற்ற இந்த ஆண்டுக்கான அல்லது கடந்த ஆண்டுக்கான அனுமதிப் பத்திரம் என்பவற்றை வைத்திருக்க வேண்டும்.

ஒரு வருடத்துக்குள் பெற்ற உணவு கையாளுபவர்களுக்கான மருதுவச் சான்றிதழ் உள்ளவர்களே உணவு கையாள முடியும். உணவு கையாளுபவர்கள் தனிநபர் பாதுகாப்பு அங்கிகளைப் பொருத்தமான முறையில் அணிவதோடு உணவு மாசடையாத வகையில் கொள்கலன்கள் அலுமாரிகளைப் பேணவேண்டும்.

பொருத்தமான விதத்தில் கைகழுவும் வசதியும், கழிவுப் பொருள் முகாமைத்துவத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.

தனிநபர் சுகாதாரத்தை உயர்ந்த மட்டத்தில் பேணுவதோடு பொலித்தீன் பாவனையை தவிர்ப்பதும் சிறந்தது. அத்துடன் பொது மக்கள் பெருமளவில் கூடும் பொது இடமாதலால் புகைப் பொருள் மதுபான பாவனையும் தவிர்க்கப்பட வேண்டும். -என்றார்.

பாலைதீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கான முன்னாயத்த ஒழுங்குகளை கத்தோலிக்க திருச்சபை, பூநகரி பிரதேச செயலகம், பூநகரி பிரதேச சபை, பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கடற்படை, இராணுவம், பொலிஸ் மற்றும் கடற்தொழிலாளர் அமைப்புகள் இணைந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# தென்மராட்சி சாதனையாளரை கௌரவித்தார் அங்கஜன் எம்.பி.

(த.சுபேசன்)

தென்மராட்சி மட்டுவில் கிராமத்தைச் சேர்ந்த 60 வயதான உலக சாதனையாளர் செ.திருச்செல்வம் ஞாயிற்றுக்கிழமை (18) யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இதன்போது சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த உலக சாதனையாளரை கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் அவருடைய சாதனையைப் பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் உறுதியளித்திருந்தார். சாதனையாளர் செ.திருச்செல்வம் தனது தாடி மற்றும் தலை முறையின் உதவியுடன் கனரக வாகனத்தை இழுத்து இரு தடவைகள் சோழன் உலக சாத னையை நிலை நாட்டியுள்ளார் என்பத குறிப்பிடத்தக்கது.




# தீபச்செல்வன் எழுதிய 'பயங்கரவாதி' நாவல் திருகோணமலையில் அறிமுகம்

(ஹஸ்பர்)

எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய 'பயங்கரவாதி' நாவல் அறிமுக விழா சனிக்கிழமை (17) திருகோணமலை நகரசபை பொது நூலகக் கேட்போர் கூடத்தில் கவிஞர் ஓய்வு நிலை அதிபர் க . யோகானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தொடக்கவுரையை கவிஞர் ஆசிரியர் தி . பவித்ரன் வழங்கினார். நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிழக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் சி . தண்டாயுதபாணிக்கு நூல் ஆசிரியர் தீபச்செல்வன் நூலின் முதல் பிரதியை வழங்கி அறிமுகம் செய்து வைத்தார்.



# 'தேடலில் வந்த தோழன்' கவிதை நூல் வெளியீடு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திஹாரியை சேர்ந்த முஷ்பிகா முன்ஷிரின் 'தேடலில் வந்த தோழன்' நூல் வெளியீடு திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் மூதூர் ஜே.எம்.ஐ. நிறுவன பணிப்பாளர் ஜே.எம்.இஹ்ஷான் தலைமையில் இடம் பெற்றது.



இந்த நிகழ்வில் முதன்மை அழைப்பாளராக சிரேஷ்ட எழுத்தாளர் நஜ்முல் ஹுசைன், ஹாதியா இஸ்லாமிய கற்கை நிறுவன அதிபர் அஷ்செய்க் அக்ரம் அப்துஸ் ஸமத் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஹாதியா இஸ்லாமிய கல்லூரி இறுதியாண்டு மாணவியாக கல்வியைத் தொடரும் நூலாசிரியர் முஷ்பிகா முன்ஷிரின் கன்னி கவிதைத் தொகுப்பு நூலாக இது வெளிவந்துள்ளது.




# மட்டக்களப்பு நகர் றோட்டரி கழகத்தால் மாணவர்களுக்குச் சமைத்த உணவு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு நகர் றோட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் நாற்பதுவட்டை விபுலானந்தா வித்தியாலய மாணவர்களுக்கு சமைத்த பகல் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகர் றோட்டரி கழகத்தின் தலைவர் தொழிலதிபர் தேசபந்து எம்.செல்வராசா தலைமையில் 200 மாணவர்களுக்கும் 20 பணியாளர்களுக்கும் சமைத்த பகல் உணவுப் பொதியும், தண்ணீர்ப் போத்தலும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கழகத்தின் செயலாளரும் கிழக்குப் பல் கலைக்கழகத்தின் முன்னாள் பிரதி உப வேந்தருமான வைத்திய கலாநிதி கே.கருணாகரன், கழகத்தின் 2023 - 2024 ஆண்டுக்காக முன்மொழியப்பட்டுள்ள தலைவர் ஜெகவண்ணன், கழகத்தின் உறுப்பினர் திருமதி செல்வராசா உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டு உணவுப் பொதிகளை வழங்கினர்.



# ‘வாழ்வியலும் வரலாறும்’ நூல் வெளியீடு

(கே எ ஹமீட், ஏ.எல். எம்.ஷினாஸ்)

நற்பிட்டிமுனை முஸ் லிம்களின் ‘வாழ்வியலும் வரலாறும்’ நூல் வெளியீடு கடந்த சனிக்கிழமை (17) கல் முனை ஆஷாத் பிளாஸா மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைஷால் காசீம் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம். எல். எம். ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாணத்தின் முன் னாள் அமைச்சர் எம். எஸ். உதுமாலெப்பை, அக்கரைப் பற்று முன்னாள் மாநகர சபை உறுப்பினர் எஸ். எம். சபீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







# கல்முனை கார்மேல் பற்றிமாவில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வுகள்

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த தைப்பொங்கல் விழா கடந்த (16) வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

அதிதிகளாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் மகப்பேறு வைத்திய நிபுணர் டாக்டர் கோ.வசந்தராஜா, அம்பாறை நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளர் திருமதி புவிராஜினி விஷ்ணுரூபன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா , கல்முனை ஹற்றன் நாஷனல் வங்கி முகாமையாளர் ஏ. நிர்மலகுமார், பற்றிமா 125 ஆவது ஆண்டு விழாக் குழுப் பொருளாளர் எஸ்.சிறிரங்கன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

விழாவில் கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்யாலயா அதிபர் ரிசாட் மற்றும் மாணவர்களும், சிங்கள மகா வித்தியாலய அதிபர், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பற்றிமா பழைய மாணவர்களான வைத்திய கலாநிதி டாக்டர் வசந்தராஜா, பொறியியலாளர் புவிராஜினி ஆகியோர் நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.











# பழுகாமம் ஆஸ்பத்திரியில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

(எம்.எம்.றம்ஸீன்)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப் பற்று பழுகாமம் பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

திருப்பழுகாமம் கிராமத்திலுள்ள ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளான மாவேற்குடா, விபுலானந்தபுரம், வன்னிநகர், வீரஞ்சேனை, பழுகாம 01, பழுகாமம் 02 மக்களின் பங்களிப்புடன் போரதீவுப்பற்று பழுகாமம் பிரதேச வைத்திய அதிகாரி அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன் பணிப்புரையின் கீழ் இந்த டெங்கு ஒழிப்பு சிரமதானம் இடம்பெற்றது.

கிராம உத்தியோகஸ்தர்கள் , பொது மக்கள் மற்றும் நலன் விரும்பிகள், விளையாட்டுக் கழக இளைஞர்கள் சிரமதானத்தில் கலந்து கொண்டனர்.



# ஊடகவியலாளர் திருமலை நவத்தின் ‘தேசாந்தரம்’ குறுநாவல் வெளியீடு!

(ஹஸ்பர்)

ஊடகவியலாளர் திருமலை நவத்தின் “தேசாந்தரம்” குறுநாவல் க. திருச்செல்வத்தின் தலைமையில் ‘நம்மட முற்றம்’ அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (18) திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நூலின் முதற் பிரதி கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் பாயிஸ்'க்கு வழங்கி வெளி யீட்டு வைக்கப்பட்டது.



நூலுக்கான திறனாய்வைப் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் வ.முரளிதரன் வழங்கினார். ஏற்புரையை நூலாசிரியர், ஊடகவியலாளர் திருமலை நவம் வழங்கினார். குறுநாவல் எழுந்த பின்னணி பற்றிக் கூறினார்.

# இலங்கையின் கருத்துச் சுதந்திர நிலைமை உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தல் தருகிறது

## அமெரிக்க பொது இராஜதந்திரத்துக்கான துணைச் செயலாளர் எலிசபெத் ஆலன் அதிருப்தி

இலங்கையில் ஏற்பட்டுள்ள சில கரிசனைகள் உட்பட கருத்து சுதந்திரத்தின் பல அம்சங்கள் தற்போது உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

அமெரிக்க பொது இராஜதந்திரத்துக்கான துணைச் செயலாளர் எலிசபெத் ஆலன் இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

'உலகளாவிய ஊடக வெளியும் ஜனநாயகத்தின் மீதான அதன் தாக்கமும்' என்ற தொனிப்பொருளில் இலங்கை பத்திரிகை நிறுவனத்தால் நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இலங்கை உட்பட உலகளவில் பல அத்தியாவசிய சுதந்திரங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

அமெரிக்கா கருத்து சுதந்திரத்துக்காக உறுதியாக நிற்கிறது. இணையத்திலும் வெளியிலும் பத்திரிகை சுதந்திரத்துக்காக வாதிடுகிறது.

இலங்கையில் இணைய பாதுகாப்பு சட்டமூலம் அண்மையில் நிறைவேற்றப்பட்டது. கருத்துச் சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமை ஆகியவற்றில், குறித்த சட்டத்தின் சாத்தியமான விளைவுகள் குறித்து அமெரிக்க அரசு கவலை தெரிவித்துள்ளது.



இணைய அணுகலைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் உள்ளடக்கத்தை தணிக்கை செய்வதன் மூலமும் பொது மக்களிடம் இருந்து தகவல்களைத் தடுக்கும் முயற்சிகளை அரசுகள் தீவிரப்படுத்தும் போது, நாம் அது தொடர்பில் பேச வேண்டும்.

கட்டுப்பாடற்ற கருத்துச் சுதந்திரத்துக்கு எதிராக அதிருப்தி இருந்தாலும், சுதந்திரமான ஊடகம் இலங்கைக்கு எதிரி அல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

சுதந்திரமான ஊடகம் மிகப்பெரிய கூட்டாளிகளில் ஒன்றாகும், இது ஒரு நெகிழ்ச்சியான மற்றும் செழிப்பான சமுதாயத்துக்கு வழி வகுக்கிறது. கட்டுப்பாடற்ற கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான வாதங்களைக் கேட்பது பொதுவானது.

அரசுகளைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதையும் பொது மக்களின் நம்பிக்கையை குறைமதிப்புக்கு உட்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட ஊடகங்கள் பக்கச்சார்பானவை.

தடைகள் இல்லாமல், கருத்துச் சுதந்திரம் தவறான தகவல்களை பரப்புவதற்குத் தூண்டலாம் என்று மற்றவர்கள் கவலைப்படுகிறார்கள்.

எனினும் ஊழல், வன்முறை மற்றும் அரசியல் சண்டைகள் பற்றிய தொடர்ச்சியான அறிக்கைகள் ஒரு நாட்டின் நற்பெயரைக் கெடுக்கும், முதலீட்டைத் தடுக்கும் மற்றும் வளர்ச்சியைத் தடுக்கும்.-என்றார்.



# அக்கரைப்பற்று திருவள்ளுவர் வித்தி. புலமை பரிசில் மாணவர் கௌரவிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்கரைப்பற்று திருவள்ளுவர் வித்தியாலயத்தில் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலயத்தில் அதிபர் தங்கேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் திருக்கோவில் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர், எஸ். சுரநுதன் பிரதம அதிதியாகவும், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அகிலன் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

திருமதி.சு.நித்தியானந்தன், பாடசாலை அபிவிருத்தி சபை செயலாளர் சு.முரளிதர்ஷன், அக்கரைப்பற்று மக்கள் வங்கி முகாமையாளர் ராஜகாந்தன், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# அரசியலில் இருந்து பிரதமர் மோடிக்கு விடுதலை கொடுப்பதற்கு மக்கள் தயார்

## செல்வப்பெருந்தகை தகவல்

அரசியலில் இருந்து பிரதமர் மோடிக்கு விடுதலை கொடுக்க மக்கள் தயாராகிவிட்டனர் என்று காங்கிரஸ் சார்பில் மத்திய அரசுக்கு எதிராக சென்னையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கட்சியின் மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந் தகை தெரிவித் துள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கை வருமான வரித்துறை முடக்கியதை கண்டித்து, தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சென்னை மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் சிவ.ராஜசேகரன், எம்.பி. ரஞ்சன்குமார், முத்தழகன், எம்.எஸ். திரவியம், டில்லிபாபு, அடையாறு துரை ஆகியோர் ஏற்பாட்டில், கட்சியின் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மத்திய பாஜக அரசுக்கு எதிராக தொண்டர்களும், கட்சி நிர்வாகிகளும் கோஷங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின்போது செல்வப் பெருந்தகை கருத்து தெரிவிக்கையில், “ எங்கெங்கெல்லாம் பா.ஜ.க. ஆட்சி இல்லையோ அங்கெல்லாம் அந்த மாநில கட்சிகளை ஒடுக்குவது, பிள்ளை பிடிப்பவர்கள்போல் எம்.பி, எம்.எல். ஏக்களை பிடிப்பது போன்ற செயல்களில் பா.ஜ.க. ஈடுபட்டு வருகிறது.

விடுதலைப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்த காங்கிரஸ் தலைவர்கள் இந்த நாட்டை பிரிட்டிஷ் அரசிடம் இருந்து மீட்டெடுக்க வேண்டும். கிழக்கு இந்திய கொம்பெனியை வெளியேற்ற வேண் டும். இந்த நாட்டு மக்கள் முழுமையான சுதந்திர காற்றை சுவாசிக்க வேண்டும் என்று போராடினர்.

நாட்டின் விடுதலைக்கும், மோடிக்கும், பா.ஜ.கவுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? இந்த நாட்டு விடுதலை போராட்ட வீரர்கள் யாராவது பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ்-ல் இருக்கிறார்களா? நாட்டின் விடுதலைக்கும், அவர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லாமல், எந்த ஒரு அர்ப்பணிப்பும் இல்லாமல், எந்த களப்பணிக்கும் செல்லாமல் மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்ததுதான் பா.ஜ.க. அரசு.

400 தொகுதிகளில் வெற்றி பெறு வோம் என்பதில் உறுதியாக இருக்கும் பா.ஜ.க, எதற்காக காங்கிரஸ் வங்கிக் கணக்கை முடக்குகிறது. திருட்டும், புரட்டும் ஒரு நாள் விடியும். நீண்ட நெடிய நாள்கள் ஏமாற்ற முடியாது. பிரதமர் மோடிக்கு அரசியலில் இருந்து விடு தலை கொடுக்க மக்கள் தயாராகிவிட்ட னர். மோடிக்கு இதுதான் கடைசி ஆட்சி. வரும் தேர்தலில் இண்டியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதி.” - என்றார்.

# ராகுல் யாத்திரைக்கு அகிலேஷ் நிபந்தனை

மக்களவைத் தேர்தலை கருத்தில் கொண்டு, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி பாரத் ஜோடோ நியாய் யாத்திரை மேற்கொண்டு வருகிறார்.

இந்த யாத்திரை, 37 ஆவது நாளான நேற்று உத்தரபிரதேச மாநிலம் பாபுகஞ்ச் சென்றடைந்தது. அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தியும் காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜ"ன கார்கேவும் பங்கேற்றனர். இதை யடுத்து நேற்று இரவு அமேதியில் யாத்திரை நடைபெற்றது. இன்று ரேபரேலியில் யாத்திரை நடை பெறுகிறது.

இதையொட்டி, இந்த யாத்திரையில் பங்கேற்குமாறு சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவுக்கு மல்லிகார்ஜ"ன கார்கே அழைப்பு விடுத்திருந்தார். இதை ஏற்றுக் கொண்ட அகிலேஷ், அமேதி அல்லது ரேபரேலியில் நடைபெறும் யாத்திரையில் பங்கேற்பதாக கூறியிருந்தார்.

இந்நிலையில், அகிலேஷ் யாதவ் செய்தியாளர்களிடம் நேற்று கூறும்போது,



“காங்கிரஸ் கட்சியுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. அவர்கள் ஒரு பட்டியலை கொடுத்துள்ளார்கள். நாங்களும் ஒரு பட்டியலை கொடுத் துள்ளோம். இதில் முடிவு எட்டப்பட்டால்தான் பாரத் ஜோடோ நியாய் யாத்திரையில் பங்கேற்பேன்.'-என்றார்.

# திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த வேண்டும்: அமைச்சர்ளுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்

தமிழக நிதியமைச்சரின் வரவு செலவு திட்டம், அரசின் கனவு. அந்த கனவை நனவாக்க அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர்கள் பாடுபடுகின்றனர் எனவும் திட்டங்களை சிறப்பாக செயல் படுத்த வேண்டும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின அறிவுறுத்தியுள் ளார்.

சட்டப்பேரவையில் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்த வரவு செலவு திட்டம் குறித்து முதல்வர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப் பிடுகையில்,



“தடை களைத் தாண்டி, வளர்ச்சியை நோக்கி தமிழகம் சீர்மிகு பயணத்தை நடத்தி வருகிறது. பொதுவாக வரவு செலவு திட்டம் என்பது நிதியை மைய மாகக் கொண்டு தயாரிக்கப்படும். சமூக நீதியை மையமாகக் கொண்டு தயாரான இந்த அறிக்கை, அனைத்து மக்களுக் குமான சமநீதியையும் - சமநிதியையும் வழங்கி தமிழகத்தின் சீரான வளர்ச் சிக்கான பாதைக்கு அதிவேகப் பய ணத்தை உறுதி செய்துள்ளது.

இந்தியாவின் பொருளாதாரத்துக்கு 9 சதவீத பங்கை தருவதாக தமிழகத்தின் பொருளாதாரம் வளமாக உள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத் தியில் தமிழகம் 2 ஆவது இடத்தில் உள்ளது. மாநிலத்தின் பணவீக்கம் 5.97 சதவீதமாக குறைந்துள்ளது. ஏற்றுமதி தயார்நிலை குறியீட்டில் நாட்டிலேயே முதல் மாநிலமாக தமிழகம் உயர்ந்துள்ளது. தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14 ஆவது இடத்தில் இருந்து 3 ஆவது இடத்துக்கு தமிழ கத்தை உயர்த்தி இருக்கிறோம். புத்தாக் கத் தொழில்கள் வரிசையில் தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது. இப்படி அனைத்துத் துறையிலும் முன்னேறி வரும் மாநிலமாகத் தமிழகம் உள்ளது.

அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி என்பதே ‘திராவிட மாதிரி’ வளர்ச்சியின் இலக்குகளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். இந்த வளர்ச்சியின் அடுத்தகட்ட உயர்வை அடையாளம் காட்டுவதாக தமிழக வரவு செலவு திட்டம் அமைந் துள்ளது. இந்த வரவு செலவு திட்டம் 7 மாபெரும் கனவுகளை மாபெரும் இலக்காகக் கொண்டுள்ளது. குடிமை முதல் விண்வெளி வரை அனைத் தையும் உள்ளடக்கிய அறிக்கையாக இது அமைந்துள்ளது.

ஏழு பெரும் கனவுகளையும் முழு மையாக நிறைவேற்றும்போது தமிழகம் நாட்டில் சிறந்த மாநிலமாக திகழும் காலம் விரைவாக ஏற்படும்.

இவை நமது அரசின் கனவுகள் மட்டுமல்ல, நனவாகப் போகும் கனவு கள். நாளை முதல் அனைத்தும் நன வாகும். துறை சார்ந்த அமைச்சர்களும், துறையின் செயலர்களும் இந்த திட்டங்கள் எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டனவோ அதை மனதில் வைத்து சிறப்பாகச் செயல்படுத்திக் காட்ட வேண்டும். மாவட்ட ஆட்சியர்களும் மாவட்ட நிர்வாகமும் தங்களுக்கான திட்டங்களை மிகமிகச் சிறப்பாக நடை முறைப்படுத்த வேண்டும்.” - என்று குறிப்பிட்டுள்ளார்.

# கர்நாடகாவில் காங்கிரஸுக்கு இருபது இடங்கள் கிடைக்கும்

## முதல்வர் சித்தராமையா நம்பிக்கை

மக்களவைத் தேர்தலில் கர்நாடகா வில் காங்கிரஸ் 20 இடங்களில் வெற்றி பெறும் என மாநில முதல்வர் சித்தரா மையா தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், கர்நாடக முதல்வர் சித்தராமையா மைசூருவில் காங்கிரஸ் நிர்வாகிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக் கையில்,



“கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தவுடன் இலவச அரிசி, இலவச மின் சாரம் உள்ளிட்ட 5 முக்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதற்கு மக்களிடையே நல்ல வர வேற்பு கிடைத்துள்ளது. தற்போது பட் ஜெட்டில் அறிவித்துள்ள திட்டங்களையும் விரைவில் நிறைவேற்ற முடிவெடுத்துள் ளோம். ஆனால் மத்தியில் ஆளும் பா.ஜ.க. கர்நாடகாவின் வளர்ச்சிக்கு தடை போட முயல்கிறது. கர்நாடகாவுக்கு நியாயமாக ஒதுக்க வேண்டிய நிதியை யும் ஒதுக்காமல் வஞ்சிக்கிறது.

இங்குள்ள பா.ஜ.கவினருக்கும் ம.ஜ.த.வினருக்கும் கர்நாடகாவின் முன்னேற்றத்தில் அக்கறை இல்லை. ஆனால் எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் 28 இடங்களிலும் வெல்லப் போவதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால், எதிர்வரும் மக்களவைத் தேர் தலில் பா.ஜ.கவை கன்னடர்கள் தண்டிக் கப் போகிறார்கள். காங்கிரஸை 20 இடங் கும் மேற்பட்ட இடங்களில் வெற்றிப்பெற வைத்து ஆசீர்வதிக்கப் போகிறார்கள்.

மக்களின் செல்வாக்கு பெற்ற நிர்வாகிகளுக்கே தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படும். உள்ளூர் தலைவர்கள் முன்மொழியும் நபரையே தேசிய தலைமை வேட்பாளராக அறிவிக்கும். கர்நாடகாவில் இப்போது பா.ஜ.க. மட்டுமே எதிர்க்கட்சியாக இருக்கிறது. ம.ஜ.த.வை பா.ஜ.கவுடன் இணைத்துவிட்டார்கள்.

ஒரே எதிரியாக இருப்பதால் காங்கிர ஸின் வெற்றி எளிதாகிவிட்டது. தேசிய அளவிலான அரசியல் மாற்றத்துக்கு கர்நாடகாவின் வெற்றி அடித்தளமாக அமையும்.” - என்றார்.




# அலெக்ஸி நவல்னியின் உடல் ஒப்படைக்கப்படமாட்டாது

ரஷ்ய சிறைச்சாலையில் உயிரிழந்த எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னியின் உடல் இரண்டு வாரங்களுக்கு குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரசாயன பகுப்பாய்வுகள் நிறைவடையும் வரை அவரது உடல் குடும்பத்தாரிடம் வழங்கப்படாதென நவல்னியின் தாயாரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என நவல்னியின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த 16 ஆம் திகதி உயிரிழந்த எதிர்க்கட்சித் தலைவரின் உடல் தற்போது எங்குள்ளது என்பது தொடர்பான தகவல்களும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், கொலை செய்யப்பட்ட அலெக்ஸி நவல்னியின் உடலில் உள்ள நஞ்சுத்தன்மையை நீக்கும் நடவடிக்கைக்காக இரண்டு வாரங்களுக்கு இரசாயண பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் உடலை குடும்பத்தாரிடம் வழங்க மறுக்கப்படும் நடவடிக்கையின் பின்னணியில், வேறு அரசியல் சதித் திட்டங்கள் இருக்கலாம் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

மேலும், அலெக்ஸி நவல்னி கொலை செய்யப்பட்டிருப்பது ரஷ்ய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ரஷ்யா ஜனாதிபதி புடினால் கொலை செய்யப்பட்ட தனது கணவரின் உடலை இரகசியமாக மறைத்து வைக்க சில தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக மறைந்த எதிர்க்கட்சித் தலைவரின் மனைவி யூலியா நவல்னயா குற்றம் சாட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றால் இந்தியாவுடனான கூட்டணியை வலுப்படுத்துவேன்

## ஜனாதிபதி வேட்பாளர் நிக்கி ஹாலே தெரிவிப்பு




அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றால் இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் கூட்டணியை வலுப்படுத்துவேன் என தனது தேர்தல் பரப்புரையில் ஜனாதிபதி வேற்பாளர் நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி யார் என்ற பரபரப்பில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், இங்கே ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற முடிவே பெரும் பேசுபொருளாக அமெரிக்காவின் குடியரசு கட்சியில் நிலவி வருகிறது.

குறிப்பாக, குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் நான் தான் என்று டொனால்ட் ட்ரம்ப் மற்றும் நிக்கி ஹாலே இடையே வலுவான போட்டி நிலவி வருகிறது.

இதில் யார் அதற்கான சரியான தேர்வு என்பதை உறுதியாக்கும் வண்ணம் இருவரும் தங்கள் பிரச்சாரங்களை காரசாரமாக நிகழ்த்தி வருகின்றனர்.

இந்த நிலையில், நான் ஜனாதிபதியானால், இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் கூட்டணியை வலுப்படுத்துவேன் என நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து நிக்கி ஹாலே மேலும் தெரிவிக்கையில், "டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவானால், பல விடயங்கள் குறித்து நான் கவலைப் படுகிறேன், அவற்றில் ஒன்றுதான் மற்ற நாடுகள் உடனான கூட்டணி." -என்றார்.

நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், நேட்டோ உடனான கூட்டணியை மேலும் வலுப்படுதுவேன் எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில், நான் ஜனாதிபதியானால், இந்தியா உள்ளிட்ட நாடுகளுடன் கூட்டணியை வலுப்படுத்துவேன் என நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார்.




# ஹவுத்திகளின் தாக்குதலால் பிரிட்டன் கப்பல் மூழ்கியது



ஏடன் வளைகுடாவில் தமது தாக்குதலுக்கு இலக்கான பிரிட்டன் கப்பல் கடலில் மூழ்கியுள்ளதாக ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த அமைப்பின் இராணுவ செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சரியா தெரிவிக்கையில்,

தமது தாக்குதலை அடுத்து கப்பலில் இருந்தவர்கள் கப்பலைக் கைவிட்டதால் தற்போது இந்த கப்பல் பெரும் சேதம் அடைந்து மூழ்கியதாக குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, செங்கடலை ஏடன் வளைகுடாவுடன் இணைக்கும் பாப் எல்-மண்டேப் ஜலசந்தி வழியாக பெலிஸ் கொடியுடன் கூடிய பிரித்தானிய கப்பலான ரூபிமார் சரக்குக் கப்பல், ஹவுதிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாக ஐக்கிய இராச்சிய கடல்சார் வர்த்தக நடவடிக்கை மையம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு
பக்கங்கள் - 5
செவ்வாய்க்கிழமை 20/02/2024

## வீட்டுவசதி ஒப்பந்தங்கள் அல்பேர்ட்டாவில் பூர்த்தி

### மத்திய அரசாங்கம் தெரிவிப்பு

அல்பேர்ட்டாவில் உள்ள ஆறு சிறிய மற்றும் கிராமப்புற சமூகங்களுடன் வீட்டுவசதி ஒப்பந்தங்களை பூர்த்தி செய்துவிட்டதாக

C2



# சசகெச்சுவான் மாநிலத்தில் தீ விபத்து

# 3 சிறுவர்கள், இரு வயோதிபர்கள் பலி!

**சசகெச்சுவான் - சசகெச்சுவான் மாநிலத்தின் டேவிட்சன் பகுதியில் வீடொன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் மூன்று சிறுவர்கள் உள்ளடங்கலாக ஐவர் உயிரிழந்துள்ளனர்.**

**ஞாயிற்றுக்கிழமைமாலை இடம்பெற்ற தீ விபத்தில் கருகிய நிலையில் மூன்று சிறுவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.**

இந்த தீ விபத்தில், வீட்டின் கூரை முழுமையாக கருகி சேதடைந்துள்ளதுடன், ஜன்னல்களும் முழுமையாக சேதமடைந்துள்ளன.

தீ விபத்துக்குள்ளான வீட்டில் இருந்து முறையே 80 மற்றும் 81 வயதான ஆணொருவரும், பெண்ணொருவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும், வைத்தியசாலையில் வைத்து சிகிக்சைப் பலனின்றி அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதன் பின்னரே, கருகிய நிலையில் மூன்று சிறுவர்களின் உடல்களை கண்டெடுக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கனேடியர்கள் தமது வருமான வரி விவரங்களை பதிவு செய்வதற்கான காலம் நேற்றுடன் ஆரம்பம்

கனேடியர்கள் தமது வருமான வரி விவரங்களைப் பதிவு செய்வதற்கான காலம் உத்தியோகபூர்வமாக நேற்று திங்கட்கிழமையன்று (பெப்ரவரி 19) ஆரம்பித்தது.

காகிதங்கள் மூலம் தமது வருமான வரியைப் பதிவு செய்வதற்கான ஆவணங்கள் தபாலில் குறித்த நபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனக் கனேடிய வருமான வரி நிறுவனம் தெரிவிக்கின்றது.

பெரும்பாலான கனேடியர்கள் ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் தங்கள் வரிக் கணக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

இது கனேடிய வருமான வரி நிறுவனத்திற்கு பணம் செலுத்த வேண்டியவர்களுக்கு பணம் செலுத்துவதற்கான காலக்கெடுவாகும்.




எவ்வாறாயினும், சுயதொழில் செய்யும் கனேடியர்கள், தங்கள் வாழ்க்கைத் துணை அல்லது பொதுச் சட்டப் பங்காளிகளுடன் சேர்ந்து தமது விவரங்களைத் தாக்கல் செய்வதற்கு ஜூன் 15 வரை கால அவகாசம் உண்டு.

சுயதொழில் செய்யும் கனேடியர்கள் மேலதிக வட்டி செலுத்துவதைத் தவிர்ப்பதற்கு ஏப்ரல் 30 காலக்கெடுவிற்குள் கனேடிய வருமான வரி நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய பணத்தை செலுத்த வேண்டும்.

2024 வரி தாக்கல் பருவத்தில் பல மாற்றங்கள் உள்ளன என்று கனடாவின் பட்டய நிபுணத்துவ கணக்காளர்கள் கூறுகிறார்கள்.



# ஒன்ராரியோ மாநிலங்களவையின் அமர்வு பரபரப்பான செயல்பாடுகளுடன் ஆரம்பம்

ஒன்ராரியோ மாநிலங்களவை இந்த வாரம் ஒரு பரபரப்பான செயல்பாடுகளுடன் தனது அமர்வைத் தொடங்கவுள்ளது.

அரசமைப்புச் சட்டத்திற்கு முரணான ஊதியக் கட்டுப்பாடு சட்டத்தை நீக்குவது முதல் பீல் பிராந்தியத்தைக் கலைக்கும் முடிவைத் திரும்பப் பெறுதல் மற்றும் அரசியல் ரீதியாக விமர்சிக்கப்பட்டு வரும் பெயரிடப்பட்டாத சட்டத்தை அறிமுகப்படுத்துவது முதல் பல்வேறு முக்கிய அரசியல் நடவடிக்கைகள் இந்த வாரத்தில் இடம்பெறவுள்ளன.

கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களின் அமைச்சர், மாகாணத்தின் இரண்டாம் நிலை கல்வி நிறுவனங்களின் நிதிப் போராட்டங்களுக்கு தீர்வு காண்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை அமர்வின் ஆரம்பத்தில் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிறுவனங்கள் பல ஆண்டுகளாக குறைந்த மற்றும் தேக்கமான செயல்பாட்டு நிதியுடன் போராடி வருகின்றன.

2019 இல் மாநில முதல்வர் ஃபோர்டின் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 10 சதவீத கல்விக் குறைப்பு மற்றும் முடக்கம் என்பன அவர்களின் சவால்களை அதிகரித்துள்ளன என்று அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முடிவுகள் தெரிவிக்கின்றன.



## வீட்டுவசதி ஒப்பந்தங்கள்

(C1 ஆம் பகத் தொடர்ச்சி)

கனடா மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மவுன்டன் நகரம், சில்வன் ஏரி, போ தீவு, வெஸ்ட்லாக், ஸ்மோக்கி லேக் மற்றும் டச்சஸ் கிராமத்துடனான இந்த புதிய ஒப்பந்தங்கள் குறித்து வீடமைப்புத்துறை அமைச்சர் சோன் ஃப்ரேசர் அறிவித்தார்.

இந்த ஒப்பந்தங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் 400க்கும் மேற்பட்ட வீடுகளை விரைவாகக் கண்காணிக்கவும், அடுத்த தசாப்தத்தில் 3,100 வீடுகளின் நிர்மாணத்தைத் தூண்டவும் உதவும் என்று ஃப்ரேசர் இதன் போது குறிப்பிட்டார்.

மத்திய அரசாங்கமானது தமது வீட்டுவசதிகளை அதிகரிக்கும் முன் முயற்சியின் அங்கமாக, வீடமைப்பைத் தூண்டும் நிதி ஊடாக நகராட்சி நிர்வாகங்களுடன் நேரடியாக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.

இது அதிக வீடு கட்டுவதை ஆதரிக்கும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் மாற்றங்களுக்கு ஈடாக பணத்தை வழங்குகிறது.





# ஆபத்தான நாய் வர்க்கங்களின் பட்டியல் இன்று வெளியாகும்

## டொரன்டோ நகர பொருளாதார அபிவிருத்திக் குழு நடவடிக்கை

ஒன்ராரியோ – ஆபத்தான நாய் வர்க்கங்ளின் பட்டியலை வெளிப்படுத்துவதற்கு டொரன்டோ நகரின் பொருளாதார அபிவிருத்திக் குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை (பெப்ரவரி 20) வெளியிடப்படவுள்ள இந்த அறிக்கையில், ஆபத்தானதாக அறியப்படும் நாய்களை பட்டியலிடல், அந்த நாய்களை வைத்திருக்கும் வீட்டுரிமையாளர்களை அடையாளம் காணல், இந்த விடயம் தொடர்பில் மக்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தல் என்பன நகரின் அபிவிருத்திக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளில் பிரதான இடம் பிடிக்கவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில ஆண்டுகளில் நகரத்தில் பதிவாகி வரும் பல நாய் தாக்குதல்கள் பற்றிய அறிக்கைகளைப் பின்பற்றி இந்தப் பரிந்துரைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

எட்டோபிகோக்கில், பெப்ரவரி 7ஆம் திகதி நாயின் தாக்குதலுக்கு உள்ளான பெண்ணொருவர் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய காயங்களுடன் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எதிர்கொள்ளும் ஓர் இயல்பான ஆபத்தாக இது மாறிவிட்டதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

# மத நிறுவன உண்டியலைச் சூறையாடிய திருட்டுப் பேர்வழியின் விவரம் அம்பலம்





ஒன்ராரியோ – மத நிறுவனங்களுக்குள் புகுந்து நன்கொடைப் பெட்டிகளில் இருந்து பணத்தைத் திருடினார் எனக் குற்றம் சாட்டப்பட்ட – "பெரும் குற்றவாளி" என்று விவரிக்கப்படும் –ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

மிசிசாகா பொலிஸாரால் நேற்று பெப்ரவரி 19ஆம் திகதி வெளியிடப்பட்ட செய்தி அறிக்கையில்,

மிசிசாகாவில் உள்ள ஒரு கோவிலில் ஒக்டோபர் 4ஆம் திகதி திருட்டுச் சம்பவம் நடந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தஅ சூறையாடல் சம்பவம் தொடர்பான விசாரணையின் போது சந்தேக நபர கோவிலுக்குள் நுழைந்து, நன்கொடைப் பெட்டியைத் திருடும் காட்சி கோவிலின் சிசிரிவி வீடியோவில் பதிவாகியுள்ளது.

விரிவான விசாரணைகளைத் தொடர்ந்து, சந்தேக நபர் 41 வயதான ஜகதீஷ் பந்தேர் என அடையாளம் காணப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# வெளிநாடுகளில் குற்றம் புரிந்தவர்களைத் தண்டிக்க கனடாவில் போதிய பலம் மிக்க சட்டங்கள் இல்லை!





ஒன்ராரியோ – வெளிநாடுகளில் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக தண்டனை விதிப்பதற்கு கனடாவின் தற்போதைய சட்டங்கள் போதியளவு பலம் வாய்ந்தவையாக இல்லை என கனேடியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூத வம்சாவளியான கெய்ல் பொக்நெக் என்பவரே இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

நாசி படைகளுக்காக உக்ரேனில் போர் புரிந்த ஒருவரை கனேடிய நாடாளுமன்றத்தில் பாராட்டியமை தொடர்பில் தமது நினைவுகளைப் பகிர்ந்து கொண்ட பொக்நெக், இவ்வாறான மோசமான நிகழ்வுகளை காண்பதற்கு தமது பெற்றோர்கள் உயிருடன் இல்லாமை குறித்து மகிழ்ச்சி கொள்வதாக தெரிவித்துள்ளார்.

யூதர்களுக்கு எதிராக நாசிப் படைகள் புரிந்த அட்டூழியங்கள் நிறைவு பெற்ற பல தசாப்தங்கள் கடந்துள்ள நிலையிலும் எதுவுமே இதுவரை மாறவில்லை என்பதே அவரது கருத்தாக இருக்கின்றது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய ஆண்டுகளில் யூதப் புகலிடக் கோரிக்கையாளர்களை நிராகரித்தாலும், ஆயிரக்கணக்கான நாசி போர்க் குற்றவாளிகளுக்கு புகலிடம் அளித்த பல மேற்கத்தைய நாடுகளில் கனடாவும் ஒன்றெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பிலான கனடாவின் வரலாறு குறித்து தாம் ‘அவமானம் கொள்வதாக’ தற்போதைய குடிவரவு அமைச்சர் மார்க் மில்லர் குறிப்பிட்டிருந்தார்.

1980 களின் நடுப்பகுதியில் கனடா அந்த வரலாற்றுத் தவறினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது. இதன் விளைவாக டெஸ்சென்ஸ் ஆணைக்குழு என்ற ஆணைக்குழுவினை நியமித்து, கனடாவில் நாசிக்களுடன் தொடர்புடைய 800க்கும் மேற்பட்டவர்களையும், அதிலும் விசேட கவனம் செலுத்த வேண்டிய 29 பேரையும் அடையாளம் கண்டது.




# மொன்ரியலின் கிழக்குப் பகுதியில் கத்திக் குத்தில் பெண்மணி மரணம்

கியூபெக் – மொன்றியலின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் 51 வயதான பெண்மணி ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் 53 வயதான ஆணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் குறித்த நபர் சந்தேக நபராக காணப்படுகிறார் எனவும், அவர் மீது எத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் என்பது விசாரணைகளின் பின்னரே முடிவு செய்யப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# போக்குவரத்து அமைச்சரைச் சந்திப்பதற்காக 200 டொலர்கள் அன்பளிப்பு பெறப்பட்டதா?

## கியூபெக்கின் தேர்தல் நிறுவனம் விசாரணை

கியூபெக் – போக்குவரத்து அமைச்சர் ஒருவரை சந்திப்பதற்காக 200 டொலர்கள் அன்பளிப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் ஆளும் கூட்டணியான எவ்னிர் கியூபெக் கட்சிக்கு எதிராக கியூபெக்கின் தேர்தல் நிறுவனம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தலா 100 டொலர்கள் வீதம் இருவர் இந்த அன்பளிப்பை வழங்கியுள்ளனர் எனவும், இது சட்டத்திற்கு எதிரானது எனவும் கியூபெக் தேர்தல் நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

கியூபெக் மாநில போக்குவரத்து அமைச்சரான ஜெனிவியெவ் கில்போல்ட்டைச் சந்திக்க வேண்டுமாயின், கட்சிக்கான நிதி சேகரிப்பு நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தமக்கு அறிவுறுத்தப்பட்டதாக ஓன்துவன் பித்தர் மற்றும் எலிசபெத் ரிவெரா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதியினால் தமது மகளின் உயிரை பலிகொடுத்த இந்த பெற்றோர், வாகனம் செலுத்துவதற்கான மதுபான அளவினை 0.08 வீதத்தில் இருந்து 0.05 வீதமாக குறைக்குமாறு கோருவதற்காக போக்குவரத்து அமைச்சரைச் சந்திப்பதற்கு விரும்பியுள்ளனர்.

தேர்தல் நடைபெறாத வருடங்களில் தனிநபர் அன்பளிப்புத் தொகை 100 டொலர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என கியூபெக்கின் தேர்தல்கள் சட்டம் வலியுறுத்துகின்றது.

# கனடா உயர்நீதிமன்றத்தின் புதிய நீதியரசர் நேற்று தமது பொறுப்புக்களை ஆரம்பித்தார்

ஒட்டாவா – கனடாவின் உயர்நீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக நீதியரசர் மேரி மேரெயு திங்கட்கிழமை (பெப்ரவரி 19) உத்தியோகபூர்வமாக தமது பொறுப்புக்களை ஆரம்பித்தார்.




கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் உயர்நீதிமன்ற நீதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட நீதியரசர் மேரி மேரெயுவிற்கான வரவேற்பு வைபவம் திங்கட்கிழமையன்று இடம் பெற்றது.

இவரது நியமனத்துடன், கனேடிய நீதித் துறை வரலாற்றில் உயர்நீதிமன்றத்தின் பெரும்பான்மையான நீதியரசர்கள் பெண் நீதியரசர்களாக வுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அல்பேர்ட்டா மாநிலத்தில் கிங்ஸ் பென்ச் நீதிமன்றத்தில் பிரதமர நீதியரசராக கடமையாற்றியதன் பின்னர் நீதியரசர் மேரேயுவுக்கு இந்த பதவி யுயர்வு கிடைத்துள்ளமை குறிப்பிடத் தக்கது.